நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

# முரசொலி

பக்கங்கள் ஆறு — விலை ரூபா 5.00

மாசு 06 ஒளி 11 பிரசோற்பத்தி பங்குனி 04 ( 17 . 03 . 1992 ) செவ்வாய்

## அநுரா 15 மைல் நடந்தால் சந்திரிகா 30 மைல் நடப்பாராம்

அநுரா 15 மைல்கள் நடந்தால் நான் 30 மைல்கள் நடப்பேன் என்கிறார் சந்திரிகா விஜயகுமாரரண துங்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டு ஆரம்பமாகியுள்ள பாதயாத்திரை குறித்து அவர் இவ்வாறு குறிப்பிட்டார் பாதயாத்திரையில் பங்குபற்றாது தம்மை அநுராவின் ஆதரவாளர் தடுக்க முயற்சித்ததாகவும் அவர் கூறினார். இதேவேளை லங்காசமசமாஜக் கட்சி, கம்யூனிஸ கட்சி ஆகியவற்றை இந்த பாதயாத்திரையில் பங்குபற்றச் செய்ய சந்திரிகா எடுத்த முயற்சியை அநுரா ஆதரவாளர்கள் முறியடித்துவிட்டதாகவும் தற்போது தெரியவந்துள்ளது —05 ஆம் பக்கம் பார்க்க

● ஆறுமணி நேரமாக

# வடமராட்சி மீது படையினர் கடல், வான் வழியாக தாக்கு

## பொதுமக்கள் இருவர் ஆபத்தான நிலையில் சொத்துகளுக்கும் பெருநாசம்!

**வடமராட்சிப் பகுதியில் நேற்று ஆறு மணி நேரம் விமானத்தாக்குதல், ஷெல் தாக்குதல், கடற்படை பீரங்கித் தாக்குதல என படையினர் அகோரத் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் நான்கு பொது மக்கள் காயமடைந்தனர், மேலும் இருவர் படுகாயமடைந்தனர். பொது மக்களின் சொத்துக்கள் நாசமாகின, ஐந்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.**

நேற்றுக்காலை 5 45 மணியளவில் பருத்தித்துறைமுனை கோரியடியில் திடீரென வந்த இருபொம்மர்கள் ஆறு குண்டுகளை மாறிமாறி வீசின இதில் இருவீடுகள் முற்றாக சேதமடைந்தன. வீட்டில் நித்திரையில் ஆழ்ந்திருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தனர்

தொடர்ந்து வல்வெட்டித்துறையில் 6மணியளவில் மூன்றுபொம்மர்கள், அவ்ரோ, ஹெலி, சீபிளேன் என்பன தாக்குதலை நடத்தின

அவ்வேளையில் வல்வெட்டித்துறை கடலில் தரித்து நின்ற ஆறு கடற்படை பீரங்கிப்படகுகள் ஷெல் தாக்குதலை நடத்தின

உடுப்பிட்டி, மயிலியதனை, காட்டுப்புலம், திருவில், தொண்டமனாறு, கெருடாவில் பகுதிகளில் விமானக் குண்டுகளும், பீரங்கிப்படகுகளிலிருந்து ஷெல்களும் மாறி மாறிவீழ்ந்து வெடித்தன

இதேவேளை பலாலி முகாமிலிருந்தும் வல்வெட்டித்துறை நோக்கி ஷெல்கள் கூவிக்கொண்டு வந்தன

வல்வெட்டித்துறையில் நடந்த தாக்குதலில் ஆ சிறிதரன் 19), ச சந்திரகுமார் 06 ஆம் பக்கம் பார்க்க

மணலாறு சிலோன் தியேட்டர் பகுதி

## ரோந்து அணி தப்பியதால் காவலரண் தாக்கப்பட்டது!

மணலாறில் நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் காவலரண் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானார்.

சிலோன் தியேட்டர் முகாமிலிருந்து 600 மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த காவலரணே தாக்குதலுக்குள்ளானது.

முன்னதாக இராணுவம் வழமையாக வரும் பாதையில் புலிகள் தாக்குதல் நடத்தக் காத்திருந்தனர், எனினும் படையினர் வேறு பாதையால் காவலரணை சென்றடைந்தனர்.

இதனால் புலிகள் தமது நிலையிலிருந்து முன்னேறிச் சென்று காவலரண் மீது தாக்குதலை ஆரம்பித்தனர். சிப்பாய் ஒருவர் பலியாக ஏனையோர் தப்பியோடினர் காவலரணிலிருந்து புலிகளால்

- ★ ரி - 56 மகஸீன்கள் - 12
- ★ ஐ எம் ரவைகள் - 1460
- ★ லிங் - 300
- ★ ஜே. ஆர் குண்டுகள்- 10
- ★ மற்றும் இராணுவ சாதனங்களும் கைப்பற்றப்பட்டன

## சுதந்திரக்கட்சி பாதயாத்திரையில் 13.000பேர் கலந்து கொண்டனர்

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி ஏற்பாடு செய்திருந்த 18 நாள் பாதயாத்திரை நேற்று ஆரம்பமானது முன்னதாக புத்தர் சிலைக்கு மாலை அணிவித்து மதச்சடங்குகளுடன் யாத்திரை ஆரம்பமானது

இப்பாதயாத்திரையில் தற்போது பதின்மூவாயிரம் பேர் கலந்து கொண்டுள்ளதாகவும் இத்தொகை எதிர்பார்க்கப்படும் தொகையான பதினைந்தாயிரத்தை எட்டலாம் எனவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன

எனினும் எதிர்பார்த்த அளவுக்கு பாதயாத்திரைக்கு பொலிஸ் பாதுகாப்புபோடப்படவில்லை

அரசின் தனியார் மயமாக்கும் திட்டம், விலைவாசி உயர்வு, வடக்கு கிழக்கில் போர் தொடருவது, அரசிற்கு எதிரானவர்கள் கொலைசெய்யப்படுவது ஆகியவற்றை கண்டித்தே இந்த இருவார பாதயாத்திரையை சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்துள்ளமை தெரிந்ததே

கடந்த வெள்ளியன்று இங்கு வந்த

## உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்க வேண்டாம் என பணிப்பு

ஏப்ரலில் நடைபெற்ற ஏற்பாடாகியுள்ள க. பொ. த, உயர் தர பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை விநியோகிக்க வேண்டாம் என பரீட்சைப் பகுதி யாழ் கல்விப்பணிப்பாளருக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அறிவித்துள்ளது,

கடந்த வெள்ளிக்கிழமை இந்த அனுமதி அட்டைகள் இங்கு வந்து சேர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. 06

## திருமலைக்கு 1000 அகதிகள்

தமிழகத்திலிருந்து 1000 அகதிகள் இன்று காலை திருமலை வந்து சேரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## கடன்வழங்கும் வீதம் அதிகரிக்கும்

கடன்வழங்கும் வீதங்களை வர்த்தக வங்கிகள் அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த அதிகரிப்பு ஒன்று அல்லது இரண்டு சதவீதமாக அதிகரிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது

## பொருள்கள் இறக்கப்பட்டன

கொழும்பிலிருந்து பருத்தித்துறை வந்த கோமாரி கப்பலில் இருந்து நேற்று பொருள்கள் இறக்கப்பட்டன

நேற்று பருத்தித்துறை வல்வெட்டித்துறை ஆகிய பகுதி 06 ஆம் பக்கம் பார்க்க

## அவுஸ்திரேலிய புலமைப்பரிசில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியா பட்டப் படிப்புகளை மேற்கொள்வதற்கான ஜோன் குரோபோட் புலமைப்பரிசில் பெறுவதற்கு தகுதியானவர்களை கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூதரகம் கோரியுள்ளது.

உயர்தரப பரீட்சையில் குறைந்தது 300 புள்ளிகள் பெற்ற 28 வயதிற்கு குறைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப 06 ஆம் பக்கம் பார்க்க

உளவியல் பாதிப்பிற்குள்ளான

## உலகவங்கி ஆலோசகர் விடுதலை செய்யப்பட்டார்

கனடாவைச் சேர்ந்தவரான உலகவங்கி ஆலோசகர் கலாநிதி பெரோஷ் மெடோறா (65) உலக வங்கியின் இலங்கைப் பிரதிநிதி தலையிட்டதினால் நீர்கொழும்புமேலதிக நீதிபதியினால் விடுவிக்கப்பட்டார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இவர் தகுந்த பயணப்பத்திரங்களின்றி காணப்பட்டதால் பொலிஸாரினால் கைதானார்

இவர் உளவியல் பாதிப்பிற்குள்ளானதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பிரபாகரனைக் கைது செய்யுமாறு இராஜ்யசபா உறுப்பினர்கள் கூச்சல்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் ஆகியோரை கைது செய்வது குறித்து இந்தியா ஸ்ரீலங்காவுடன் தொடர்பு கொண்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் சவான் நேற்று இராஜ்யசபாவில் கூறினார்.

இவர்களை கைது செய்வதில் இந்தியா மெத்தனமாக இருப்பதாக சபையில் நேற்று எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மாறி மாறி கேள்விகள் எழுப்பிய போதே சவான் இவ்வாறு குறிப்பிட்டார்.

புலிகள் இயக்கத்தை இந் 06 ஆம் பக்கம் பார்க்க

தேவையற்ற செலவுகள் குறைப்பு

## பாதுகாப்புச் செலவு அதிகரிப்பால் கட்டிட நிர்மாணங்கள் நிறுத்தம்

மத்திய வங்கி மற்றும் அரச நிறுவனங்களால் அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்த வானுயர் பலமாடிக் கட்டிடங்கள் நிர்மாணப் பணியை ஜனாதிபதி நிறுத்தப்பணித்துள்ளதாக கொழும்பு வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

200 கோடி ரூபா செலவில் மத்திய வங்கியினால் பலமாடிக் கட்டிடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது.

இதேபோன்று அரசாங்க அடமான மற்றும் முதலீட்டு வங்கி 150 கோடி ரூபா செலவில் அமைக்கவிருந்த கட்டிடத்திற்கான திட்டமும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

—06 ஆம் பக்கம் பார்க்க

# 'சமாதானத்தைப் போதித்துக்கொண்டு மக்களைக் கொன்று குவிக்கிறது அரசு'

"அரசாங்கம் தொழிலாளர் உரிமைகளை நசுக்கிப் பொருளாதாரத்தை ஏகாதிபத்திய எசமானர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கு முகமாக அனைத்து உபாயங்களையும் மேற்கொண்டுவருகிறது."

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்ன அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

'இவ்வரசாங்கம் சமாதானத்தைப் போதித்துக் கொண்டு அதே வேளை வடக்கிலும், தெற்கிலும் ஆயிரக்கணக்கானோரைக் கொன்று குவிக்கும் கொடிய முடிவற்ற யுத்தத்தையும் நடத்தி வருகிறது இனவாத சக்திகளையும் அது வளர்த்து வருகிறது'

'உட்பிளவுகள் காரணமாக அரசாங்கத்தின் அச்சுறுத்தல்களுக்கு நேரடியாக முகம் கொடுக்க முடியாத வக்கற்ற நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருந்து வருகிறது. இனவாதத்தைக் கைவிட்டு சிறந்த பொருளாதாரத்திற்கும், தனியார் மயப்படுதலுக்கும் எதிராகப் போராட அக் கட்சியின் இயலாமையே முக்கியகாரணமாகும்.'

'ஐக்கியதேசியக் கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாக அமைக்கப்பட்ட புதிய வலது சாரிக் கட்சியான ஜனநாயக தேசிய ஐக்கிய முன்னணியிடமும் உண்மையான மாற்றுக் கொள்கை இல்லை.'

'மேற்படிக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்வதற்கு வேண்டி நிற்கும் மற்ற இடதுசாரிக் கட்சிகளுக்கும் எவ்வித எதிர்காலமும் இல்லை' என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மகனுக்கு விளக்க மறியல்

வெள்ளவத்தை முக்கொலை வழக்கில், எதிரியைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு கல்கிசை நீதவான் உத்தரவிட்டுள்ளார்

இலங்கை இராணுவ உயர் அதிகாரியான மேஜர் தேவநாயகம் அவரது மனைவி சறோஜினி தேவநாயகம், பணியாளர் நந்திக ஆகிய மூவரையும் 25: 5 91 இல் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் குத்தியும் கொலை செய்ததாக மகன் தேவநாயகம் என்ற மாணவன் மீது குற்றம்சாட்டப்பட்டு இந்த வழக்கு தாக்கலாகியுள்ளது

## கட்டுமான வேலைகளுக்கு சிமெந்துக்குப்பதில் கற்சுண்ணாம்பு

கட்டுமான வேலைகளுக்கு சிமெந்து பெறமுடியாத இன்றைய நிலையில், சிமெந்துக்கு பதிலாக கற்சுண்ணாம்பை பயன்படுத்தும் முறையை தமிழீழ ஆய்வுநிறுவனத்தின் துணை அமைப்பான 'தேச நிர்மாணிகள்' அறிமுகப்படுத்தியுள்ளது.

எல்லோருக்கும் இது பயன்படக் கூடியதாக உள்ளதனால் கட்டுமான, வேலைகளுக்கு சுண்ணாம்புக் கல் பயன்படுத்துவது பற்றிய குறிப்புக்களை இங்கே தருகின்றோம்,

உபயோகம்: இது கட்டுமான வேலைக்கும், பூச்சு வேலைக்கும் உகந்தது. (சுண்ணாம்பு. மணல் கலந்து உபயோகிக்க வேண்டும்.)

முக்கிய குறிப்பு:

(1) சிமெந்தைப் போல் இதை உபயோகிக்க முடியாது,

(2) கட்டிய பின்புகாய கூடிய நேரம் தேவை,

(3) சிமெந்தைப் போன்ற பலத்தை இதில் எதிர்பார்க்க முடியாது.

(4) நாட்கள் கடக்கூட இதன் வலிமையும் கூடும்,

உபயோகிக்கும் முறை:

(1) கற்களாகவும், தூளாகவும் இருக்கும் சுண்ணாம்பை ஒரு பெரிய பாத்திரத்திலோ அல்லது தொட்டியிலோ இட்டு அளவாக நீர் தெளித்து சில மணி நேரம் மூடி வைத்தால் முழுவதும் சுண்ணாம்புத் தூளாகிவிடும்,

(2) இந்தத் தூளுடன் 2½ மடங்கு மணல் கலந்து (சிமெந்துடன் மணல் கலப்பதுபோல்) பின்பு அளவாக நீர் ஊற்றிக் குழைக்கவும்,

(3) 12 மணி நேரத்தின் பின் மீண்டும் இக்கலவையைக் குழைத்து வேலைக்குப் பாவிக்கலாம்,

(4) இக்கலவையை 8 நாள்களுக்குள் பாவிக்க வேண்டும். ஆனால் கலவை எப்போதும் காயாமல் நீர்த் தன்மையுடன் இருக்க வேண்டும்,

(5) இச்சுண்ணாம்புக் கலவை மூலம் மழை காலங்களில் கட்டிடம் கட்டுவது பொருத்தமல்ல,

(6) சுவர் 5-6 வரி கட்டி காய்ந்த பின்பே தொடர்ந்து மேலே கட்டுதல் வேண்டும்,

(7) இந்தக் கலவையின் உலரும் தன்மையைக் கூட்டுவதற்காக கலவையின் அளவில் 1-2 வீதம்வரை பனங்கட்டி / பனம்பாணி / சர்க்கரை இவற்றில் ஒன்றுடன் பிள்ளைக்கற்றாளைச் சாற்றைக் கலக்கலாம். இது வெளிச்சுவர் பூச்சு வேலைகளுக்குச் சிறப்பானது. பூச்சுவேலை முடிந்தவுடன் மேற்பூச்சாகச் சிப்பிச் சுண்ணாம்பு வெள்ளை வைப்பது நல்லது, இது சீரான மேற்பரப்பை அமைக்க உதவும்.

(8) இதனை சுண்ணாம்புக்கல் / சிமெந்துக்கல் / செங்கல் / சுடாதமண்கல் ஆகியவற்றிலான கட்டு வேலைக்குப் பாவிக்கலாம்,

(9) இதன் பலம் குறைந்தபடியால் சுவரின் தடிப்பு குறைந்தது 300 மி. மி. ஆக இருக்க வேண்டும்.

(10) சுவரின் தடிப்பு 300 மி. மி.க்குக் குறைந்தாயின் கூரைப்பாரம் மரத்தாலான தூண்களில் அல்லது ஏனைய மேசன் கட்டுவேலைத் தூண்களில் ஏற்றப்படல் வேண்டும்.

(11) தளப்பூச்சு வேலைக்கு இது பொருத்தமல்ல, காரணம்; தளபாடங்களால் சேதப்படலாம்,

(12) நீர்ப்பற்றுள்ள இடங்களில் இது பாவனைக்கு உகந்ததல்ல (குளியலறை, மலசலகூடம்)

(13) மேலும் பலத்தைக் கூட்டவேண்டுமாயின் நீர்ப்பற்றுள்ள இடங்களில் அமைக்கும் கட்டுவேலைக்கு சுர்க்கி (Surkhi) என்னும் மூலப் பொருளைச் சேர்க்கலாம்.

'சுர்க்கி' செய்யும் முறை

'சுர்க்கி' என்பது ஓடு. செங்கல் சேர்ந்த கலவையின் தூள், கட்டுவேலைக்கு, சுண்ணாம்பு, சுர்க்கி, மணல் என்பவற்றை முறையே

1: 1: 2 என்ற வீதத்தில் கலந்து பாவிக்கலாம்,

பூச்சு வேலைக்கு சுண்ணாம்பு, சுர்க்கி, மணல் என்பவற்றை முறையே.

1: 1: 1 என்ற வீதத்தில் கலந்து பாவிக்கலாம்

இதனை இருமுறை பூசவேண்டும்-

(14) பல வருடங்களுக்கு முன்பே மக்கள் மேற்கண்ட விதத்தில் கட்டடங்களைக் கட்டி வெற்றி பெற்றிருக்கிறார்கள்!

(15) இது சம்பந்தமான வேலைகளில் மேலதிக கருத்துக்களைப் பெறத் தகுதி வாய்ந்த கட்டிடக் கலைஞர் அல்லது பொறியியலாளர்களின் ஆலோசனையைப் பெறல் வேண்டும்,

# அச்சு இயந்திர இறக்குமதியில் பாகுபாடுஎன நீதிமன்றில்முறையீடு!

சர்வோதய இயக்கத்தினரால் இறக்குமதி செய்யப்பட்ட அச்சுயந்திரத்தைச் சர்வோதயம் பெறமுடியாது முட்டுக்கட்டை போட்ட சுங்கத் திணைக்களம், அதே போன்ற அச்சுயந்திரத்தை எவ்வித சிரமமும் இன்றி இறக்குமதி செய்வதற்கு "எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட்" பத்திரிகை நிறுவனத்துக்கு அனுமதித்தது, என்று உயர் நீதிமன்றத்தில் தாக்கலாகியுள்ள குற்றச்சாட்டு பற்றி விசாரிப்பதாக பிரதி சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளார்

சர்வோதய இயக்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே மேற்படி உறுதி அளிக்கப்பட்டது

இந்த வழக்கில் மனுதாரர் தாம் மற்ற இறக்குமதியாளர்களோடு ஒப்பிடும் போது பாகுபாடு காட்டப்பட்டதாகவும் இது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## வரவு செலவுத்திட்டநிதி தொடர்ந்தும் கிடைக்கும்

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான 25 இலட்சம் ரூபா ஒதுக்கீடு தொடர்ந்தும் வழங்கப்படுமென ஜனாதிபதி அறிவித்துள்ளார்,

இவ்வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு இதுவரை எவ் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படாததையடுத்து, எதிரணி உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்ததையடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## ஜேர்மன் தமிழ் அகராதி

ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிகளுக்குரிய தமிழ் வடிவ அகராதிகள் பல்வேறு பதிப்பகங்களால் இதுவரை நிறையவே வெளியிடப்பட்டுவிட்டன.

இதேபோல ஜேர்மன் மொழியை கற்கும் தமிழர்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் முதன் முதலாக ஜேர்மன் தமிழ் அகராதி ஒன்று வெளிவந்துள்ளது.

இப்படியொரு அரிய முயற்சியில் ஈடுபட்டு ஜேர்மன் தமிழ் அகராதியை உருவாக்கி சாதனை செய்திருப்பவர் ஒரு இலங்கையரே,

திருகோணமலை அன்புவழிபுரத்தைச் சேர்ந்த கனகசபாபதி சரவணபவன் என்பவரே இந்தச் சாதனையாளராவரர்,

## உபேந்திரா மறுப்பு

தெலுங்குதேசக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட ராஜ்யசபா உறுப்பினர் பி உபேந்திரா தமது உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ய மறுத்துவிட்டார்,

காங்கிரஸ் கட்சியில் சேருவதைப்பற்றித் தான் சிந்திக்கவேயில்லை எனத் தெரிவித்த அவர் தமது அடுத்த திட்டம்பற்றி விரைவில் முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அநுரா ..

தலைவர்கள் பாதயாத்திரையில் அடையாள யாத்திரையாக சிறிது தூரமே நடப்பார்கள் என்றும், திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூட தனது நோயின் மத்தியிலும் பாதயாத்திரையை சமாளித்திருப்பார் என்றும் பெயர் கூறவிரும்பாத சுதந்திரக்கட்சி உறுப்பினர் கூறியதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் இலங்கை

## மகாபொல கொடுப்பனவு 3ஆம், ஆம்4 தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செயற்படும்.

| | |
|---|---|
| இரண்டாம் வருடம் | |
| மருத்துவபீடம் | 16. 03 92 9. 00-12 00 மு ப |
| கலைப்பிரிவு | 19. 03 92 9. 00-12.00 மு.ப |
| வர்த்தகப்பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு | 23 03 92 9. 00-12 00 மு.ப |
| மூன்றாம் வருடம் | |
| மருத்துவ பீடம் | 16 03 92 1 30-3 00 பி.ப |
| கலைப்பிரிவு | 19. 03. 92 1 30-3 00 பி.ப |
| வர்த்தகப்பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு | 23. 03. 92 1. 30-3 00 பி ப |
| நான்காம் வருடம் | |
| மருத்துவபீடம் (4 ஆம், 5 ஆம்வருடம்) | 17 03. 92 9. 00-12.00 மு ப |
| கலைப்பிரிவு | 20 03. 92 9. 00 12.00 மு. ப |
| வர்த்தகப் பிரிவு, வியாபார நிர்வாகப் பிரிவு | 24 03. 92 9. 00-12 00 மு. ப |
| 2ஆம்; 3ஆம் 4ஆம், வருடம் | |
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு | 17. 03. 92 1 30-3.00 பி.ப |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 20. 03. 92 1. 30-3. 00 பி.ப |
| | 24. 03. 92 1. 30-3 00 பி.ப |

### கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1 பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை

2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்

03033

நல்லூர் [illegible] நூலகம்
மாநகர [illegible]
யாழ்ப்பாணம்

★ கொழும்பு நாளிதழின் வாராந்த விமர்சனத்தில் தெரிவிப்பு:-

# புலிகளின் இணக்கமின்றி வடக்கு கிழக்கில் எந்தவொரு சமாதானத் திட்டமும் நடைமுறைச் சாத்தியமில்லை

## இனவாதக் கூச்சலுக்கு இடமளிக்காது தெரிவுக்குழு வடக்கே செல்ல வேண்டும்

"விடுதலைப்புலிகளின் இணக்கமின்றி எந்தவொரு சமாதானத் திட்டத்தையும் வடக்கு கிழக்கில் நடைமுறைப்படுத்த முடியாது என்பதில் எவருக்கும் கருத்து பேதம் இல்லை எனவே தென்னிலங்கையைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் பிரதான அரசியல் சக்திகள் சகலதும் பங்கு பற்றலைப்பெறக்கூடிய இறுதிவாய்ப்பு எனக் கருதப்படும் பாராளுமன்றத் தெரிவுக்குழு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பது சாலச்சிறந்ததாகும்."

மேற்கண்டவாறு கொழும்பு நாளிதழ் ஒன்று தனது வாராந்த விமர்சனக்கட்டுரையில் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு யாழ் குடாநாட்டிற்குச் சென்று புலிகளைச் சந்திப்பதுதான் சாத்தியமாகக் கூடிய ஒன்று. என்று முடிவுக்குவர வேண்டியுள்ளது. இனவாதக் கூச்சல்களுக்கு இடமளியாமல் செயற்படும் தகுதி தெரிவுக்குழுவுக்கு இருக்கிறதா என்பதை பரீசிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமையும் என்றும் அந்த விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பரீட்சார்த்திகளுக்கு அ. அட்டைகளை விரைவாக வழங்க நடவடிக்கை

இவ்வருடம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பான சுற்றுநிருபம் பாடசாலைகளுக்கு அனுப்பப்படவுள்ளது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களை அதிபர்களும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை கிராம சேவகர்களும் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 'பிராவ்டா' நிறுத்தம்

கடந்த 80 ஆண்டுகளாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையாக விளங்கி வந்த 'பிராவ்டா' நிதிப்பற்றாக்குறைகாரணமாககடந்தவெள்ளிக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

### போட்டியில் முன்னணியில

வடமராட்சி கோட்டமட்ட பண்ணிசைப் போட்டியில் மூன்று முதல் இடங்களையும் நெல்லியடி ம. ம. வி. பெற்றுக் கொண்டது

சர்வதேச மகளிர் ஆண்டை ஒட்டி நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாம், மூன்றாம் இடங்களையும் இப்பாடசாலை பெற்றுக் கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

### மதகுரு ஆசிரியர்களின் விவரங்கள் சேகரிப்பு !

தற்போது அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகச் சேவையாற்றும் சகல மதங்களையும் சேர்ந்த மதகுரு ஆசிரியர்களின் விவரங்களை கல்விச்சேவைகள் ஆணைக்குழு சேகரித்து வருகின்றது. (15)

### 18 ஆண்டுக்குப் பின் மீண்டும் நிக்ஸன் உலக அரங்கில்

அமெரிக்காவின் கொள்கைகளை உருவாக்கும் முயற்சியில் 18 ஆண்டுகளுக்கு முன் ஜனாதிபதி பதவியை ராஜினாமாச் செய்த மூத்த அரசியல் தலைவரான றிச்சேட் நிக்ஸன் இப்போது ஈடுபட்டிருக்கிறார்.

1974 ஆம் ஆண்டு வாட்டர்கேட் ஊழலின் பின்னர் இவர் தமது பதவியைத் துறந்தார். அன்று முதல் தாம் ஒரு புதிய மனிதராக வாழ நினைத்த நிக்ஸன் இப்போது ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் வெளிநாட்டுக் கொள்கைகளைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கும் நிலையில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### மாணவி மீது ராக்கிங்; இருமாணவர்கள் நீதிமன்றில்!

இரத்மலானை ஜூனியர் பல்கலைக்கழகப் புதுவருட மாணவியை வெயிலில் நிற்கவைத்து அரை மணித்தியாலமாக 'ராக்கிங்' செய்ததாக இறுதியாண்டு மாணவர்கள் இருவர்மீது கல்கிசைப் பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சமாதானமாகப்போக முடியாது என்று மாணவியின் தந்தை தெரிவித்தார். இவ்விளைஞர்களால் தமது மகள் பல்கலைக்கழகத்துக்குப்போவதையே விட்டுவிட்டார் என்றும் அவர் கூறினார்.

விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகள் மன்னாரில் படையினரால் கைது!

இந்தியாவிலிருந்து திரும்பி பேசாலை தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டிருக்கும் அகதிகளில் 9 பேர் பாதுகாப்புப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் விசாரணையின் பின்னர் அவர்களில் இருவர் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதியிடம் முறையிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரின் இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கை திரும்பிய அகதிகள் மனதிலும், தாயகம் திரும்பாதோர் மத்தியிலும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மத்திய கல்லூரி வெற்றி பெற்றது

பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி சென். பற்றிக்ஸ் கல்லூரியை 8 விக்கற்றுகளால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்பற்றிக்ஸ் கல்லூரி 150 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

மத்தியகல்லூரி அதன் முதல் இனிங்ஸ ஆட்டத்தில் 195 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது.

சென்பற்றிக்ஸ அதன் 2 வது இனிஸசில் துரித கெதியில் விக்கற்றுகள் யாவற்றையும் பறிகொடுத்து 61 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

மத்தியகல்லூரி அதன் 2 வது இனிங்சில் 2 விக்கற்றுகளை மாத்திரம் பறிகொடுத்து வெற்றி இலக்கான 17 ஓட்டங்களை வெகு இலகுவாகப் பெற்றது 16

### கிராமசேவையாளர் பரீட்சை ஒத்திவைப்பு

ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி நடைபெறவிருந்த கிராம உத்தியோகஸ்தர்களுக்கான எழுத்துப் பரீட்சை பின்போடப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

விண்ணப்பமுடிவுத் திகதி இம்மாதம் 27ஆம் திகதி வரை பின்போடப்பட்டுள்ளது.

### கெமுனு பிரிவு சிப்பாய், மகள் மீது துப்பாக்கிச்சூடு - கத்திக்குத்து

இராணுவ கெமுனு பிரிவைச்சேர்ந்த டி.பி.விதானகே என்ற சிப்பாயும் அவரது மகளான ரஞ்சனிசேரத்தும் இனந்தெரியாத இருநபர்களால் துவக்கால் சுடப்பட்டும் கத்தியால் குத்தப்பட்டும் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் வெலிகம பொலிஸ் பகுதியில் நிகழ்ந்தது.

### அதிபர்களின் சம்பளத்தை மாற்ற கல்விச்சேவைக்குழு பணிப்பு

சேவை மூப்பு, திறமை அடிப்படையில் 1989 முதல் நியமனம் வழங்கப்பட்டும், பதவி உயர்த்தப்பட்டும் கல்விச்சேவை ஆணைக்குழுவினால் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ள அதிபர் சேவை I II. III ஐச் சேர்ந்தவர்களின் சம்பளத்தை மாற்றியமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்விச் சேவை ஆணைக்குழு பணித்துள்ளது.

இவர்களுக்கு கல்விச் சேவை ஆணைக்குழுவினால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளமையால் வேறு முறையான நியமனக் கடிதம் வழங்கப்படவேண்டிய தேவை எதுவும் இல்லை. என அறிவிக்கப்பட்டுள்ளது. (15)

### வெளிநாட்டுச்சக்திகளின் பெயர்கள் சத்தியக்கடதாசி மூலம் தெரிவிப்பு

ராஜீவ்காந்தி கொலையின் பின்னணியிலுள்ள வெளிநாட்டுச் சக்திகளின் பெயர் விவரங்களை அகில இந்திய காங்கிரஸ் கட்சி சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இந்த வெளிநாட்டுச் சக்திகள் இந்தியாவிலுள்ள, அரசுக்கெதிரான சக்திகள் சிலவற்றுடன் இணைந்து செயற்பட்டதாகவும் ராஜீவ் கொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள விசேட ஆணைக்குழுவுக்கு காங்கிரஸ் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதினொரு பக்கச் சத்தியக் கடதாசியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தங்கத்தின்விலை மேலும் சரிகிறது ஏப்ரலில் கிராம் 360 ரூபாவாகலாம்

இந்திய நிதியமைச்சர் மன்மோகன் சிங் வெளிநாடு சென்று திரும்பும் இந்தியர்கள் ஆறு மாதங்களுக்கொருமுறை 5 கிலோ தங்கம் எடுத்து வரலாம் என அறிவித்ததை அடுத்து அங்கு தங்கத்தின் விலை சரிந்து வருகிறது.

கடந்த வாரம் விற்றதை விடத் தற்பொழுது தங்கம் சுமார் 250 ரூபா குறைவாகக் கிடைக்கிறது தினமும் பம்பாய், டில்லி தங்க மார்க்கெட் நிலைவரங்கள் விலைச் சரிவைக் காட்டி வருகின்றன.

இதேநிலை தொடர்ந்தால் ஏப்ரல் மாத இறுதியில் தங்கம் கிராம் 360 ரூபாய்க்கு கிடைக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (04)

### மலையகத்தில்இனவாதத்தைத் தூண்ட சிலர் முயல்கிறார்கள் -தொண்டா

இந்திய வம்சாவளி மக்களை புலி ஆதரவாளர்களாகக் காட்டி இனவாதத்திற்கு தூபமிட மலையகத்தில் சிலர் முயற்சி செய்வதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஒருநாள் மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

சமய, இனவிரோத சக்திகள் மலையகத் தொழிலாளர்களுக்கு எதிரா தீவிரமாக செயற்பட தற்பொழுது முயற்சி எடுப்பதாகவும் அவர் கூறினார்.

### மேலும 510 அகதிகள் தலைமன்னார் வந்தடைந்தனர்

தமிழகத்திலிருந்து 145 குடும்பங்களைச்சேர்ந்த 510 பேர் கடந்த சனிக்கிழமை தலைமன்னாருக்கு இராமனுஜம் கப்பல் மூலம் வந்துசேர்ந்தனர்.

இவர்களில் அனேகமானோர் மன்னார்த்தீவு, தலைமன்னார். பேசாலை, பனங்கொட்டுக் கொட்டில், நாவற்காடு, பள்ளிமுனை, பெரியகடை. தாழ்பாடு, உப்புக்குளம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள், 58 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தலைமன்னாருக்கு மற்றொரு தொகுதி அகதிகள் வரவுள்ளனர்.

● தொண்டாவின் திட்டம்பற்றிஜெயசூரிய கண்டனம்

### தனித்தமிழ்ராஜ்யத்துக்குள் தலதா மாளிகையும் வந்து விடும்

"தலதா மாளிகை உட்பட மலை நாடு முழுவதும் தொண்டமானின் திட்டத்தின் மூலம் தமிழ் ராஜயத்துக்குள் வந்துவிடும் தொண்டமானுக்குப் பத்து இலட்சம் பேரின் ஆதரவுள்ளதாக சக்திவாய்ந்தவராகவும், செல்வாக்குள்ளவராகவும் வந்து விட்டார் சிங்கள மக்கள் ஒன்றிணைந்து அவரது யோசனைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்"

இவ்வாறு முன்னாள் அமைச்சரும், சிங்கள பாதுகாப்பு அமைப்பின் தலைவருமான காமினி ஜெயசூரிய கண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்.

★ தென்னாபிரிக்காவில் இன்று கருத்துக் கணிப்பு

# வெள்ளையர்களுக்கு எதிராக வன்செயல்கள் கட்டவிழ்ப்பு;

# 3 வாரத்தில் மட்டும் 250 க்கும் அதிகமானோர் கொலை!

தென்னாபிரிக்காவில் கருத்துக் கணிப்பு இன்று மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை அங்கு வெள்ளையர் அல்லாதோர் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் வன்செயல் அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் மட்டும் அங்கு எட்டுப் பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

புதியதோர் அரசியல் சாசனத்தைப் பற்றி பெரும்பான்மையினரான வெள்ளையர் அல்லாதோருடன் பேச்சு வார்த்தைகளைத்தொடர்ந்து நடத்துவதா வேண்டாமா என்பது குறித்த கருத்துக் கணிப்பு ஒன்று இன்று அங்கு நடைபெறுகிறது.

இந்தக் கருத்துக் கணிப்பு பற்றிய அறிவிப்பு விடுக்கப்பட்டு 3 வார காலத்தில் மட்டும் அங்கு 250 க்கும் அதிகமானோர் கொலைப்பட்டு விட்டனர்.

இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு எதிராக வாக்களிக்குமாறு வெள்ளையர்களைப் பயமுறுத்துவதற்காகவே அங்கு பெருமளவில் வன்முறைச் சம்பவங்கள் தூண்டிவிடப்படுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

# அரசியலமைப்பு மொழி உரிமையை உறுதிசெய்ய கோரிக்கை

அரசியலமைப்பு மொழி உரிமை உறுதி செய்யப்படல் வேண்டுமெனக் கிராமியத் தொழிற்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் கேட்டுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள மொழியுரிமை சில சந்தர்ப்பங்களில் மறுக்கப்பட்டு வருவதால் தமிழ் பேசும் மக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் வழக்குகள் சம்பந்தமாகவே இப்பிரச்சினை எழுந்துள்ளதாகவும் ஆகையால் அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள மொழி உரிமை அமுல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படல் வேண்டுமெனவும் அமைச்சர் தொண்டமான் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் அமைச்சரவைக்குக் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

## தேர்தல் ஆணையாளரின் அறிக்கை பெறுமதியற்றது என்கிறார் சொக்சி

தேர்தல் ஆணையாளரால் 1989ஆம்ஆண்டுதேர்தல்பற்றி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை பெறுமதியற்றதென ஜனாதிபதி பிரேமதாஸவின் வழக்கறிஞர் திரு.கே.என். சொக்சி உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாஸவுக்கெதிராக ஸ்ரீமாவோ தாக்கல் செய்த தேர்தல் வழக்கு உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே ஜனாதிபதி சார்பில் ஆஜரானசொக்சி இவ்வாறு தெரிவித்தார். அங்கு 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் பதியப்பட்ட வாக்குகளில் ஐ.தே.க. 10 சதவிகித கூடுதலான வாக்குகள் பெற்றதெனக் கூறிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் சட்டத்தரணி, தேர்தல் ஆணையாளரின் அறிக்கையைப் பார்ட்பின் எப்படிப்பட்ட தேர்தல் அது என்பது புரியும் என வாதாடிய போதே சொக்சி குறுக்கிட்டு தேர்தல் ஆணையாளரின் அறிக்கை பெறுமதியற்றது என்றார்.

தேர்தல் நடந்து 3 வருடங்களுக்குப்பின்னர் அதுவும் தனது சமர்ப்பணத்துக்குப் பின்னர் இப்போதே தேர்தல் ஆணையாளர் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார் எனவும் சொக்சி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

# மொனறாகல காட்டுப் பகுதியில் ஜே. வி. பி. நடவடிக்கை தீவிரம்!

மொனறாகல காட்டுப்பகுதியில் ஜே.வி.பியின் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் ஜே. வி. பியினர் எனச் சந்தேகிக்கப்படும் ஐவர் கைதுசெய்யப்பட்டு அவர்களிடமிருந்து பத்துத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து மொனறாகலைபகுதிக்கு கூடுதலான படையினர் தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## 'மகாமக கொடுமைக்குக் காரணம் மாநிலத்தின் கோலேந்தியின் கவர்ச்சி நாடகமே'

"சமீபத்தில் நடைபெற்ற மகாமகக் கொடுமைகளுக்கு காரணம் இந்த மாநிலத்து கோலேந்தியின் பக்தி பரவச பாடகக் காட்சியின் பளபளப்பும், ஜிலுஜிலுப்பும் தான் என்பதை எழுதாத பத்திரிகைகள் கிடையது இயம்பாத பக்தர்கள் கிடையாது" என்று தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

"அரசாங்கம் அங்குபோட்ட ஆட்டத்தால் தானே நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் சுவாசக் குழாய்கள் கிழிந்து போயின. இருதயங்களும் நொருங்கிப் போயின. ஒரு பெண்மணி அடித்த கூத்தால். முப்பதுக்கும் மேற்பட்ட பெண்மணிகளின் கண்ணின் கருமணிகள் அல்லவா மூடிப் போயின, மாமாங்க குளத்தில் மிதந்த மலர்களோடு சேர்ந்து பல மழலை மலர்களுமல்லவா மிதக்க நேர்ந்தது என்றும் அவர் சொன்னார்.

## கொழும்பு- வவுனியா இரவு ரயில் சேவையில் நேர மாற்றம்

கொழும்பு -வவுனியா இரவு ரயில் சேவையில் நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இரவு 9 45க்கு இந்த ரயில் இனிமேல் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும்.

பகல் நேர ரயில் சேவைகளின் நேர அட்டவணைகளில் மாற்றமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

## சீனாவிடம் இலங்கைவாங்கிய யுத்த விமானம் அடிக்கடி 'அந்த' அதிர்ச்சியைத் தரலாம்

இலங்கை விமானப்படை தற்பொழுது சீனாவிடமிருந்து கொள்வனவு செய்துள்ள 'எவ்-7' ரக சுப்பர் சோனிக் ஜெட் விமானத்தின் வேகத்தை திடீரெனக் குறைக்கும் போது குண்டு வெடிப்புச் சத்தம் போன்ற பெரிய சத்தமும், அதிர்வும் ஏற்படுமென விமானப் படைத்தளபதி எயர் மார்ஷல் விஜித தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கொழும்பை அதிரவைத்த பெரும் சத்தம் பற்றி நிருபர்கள் கேட்ட போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

சீனத் தயாரிப்பான இந்த யுத்த விமானம் கடந்த புதன் கிழமை பெந்தோட்டைக்கு அருகில் 33 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கையில் திடீரென விமானத்தின் வேகம் குறைக்கப்பட்டதாகவும் அப்போது எழுந்த பேரொலி, காலநிலை காரணமாக கொழும்புப் பகுதிக்குக் கேட்டு அதிர்வு ஏற்பட்டதெனவும் அவர் அங்கு விளக்கமளித்தார். (04)

## இலங்கையில் யானைகள் அருகி வருகின்றன!

இலங்கையில் கடந்த இரு நூற்றாண்டுகளில் 70% மான யானைகள் அருகிக்கொண்டு வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்நூற்றாண்டின் ஆரம்பகால கட்டங்களில் 12000 யானைகள் காடுகளில் வாழ்ந்து வந்ததாகவும், தற்பொழுது 2500 யானைகளே ஆங்காங்கே பரந்து வாழ்ந்து வருவதாகவும் இவற்றுள் அநேகமானவை தேசிய வனங்களிலும். பாதுகாப்பு உள்ள இடங்களிலுமே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

காடுகள் மக்களினால் அழிக்கப்பட்டுக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு வருவதால் இலங்கையில் உள்ள காடுகளில் யானைகள் பாதுகாப்பாக நடமாடித் திரிய முடியாத சூழ் நிலை உருவாகி வருவதே இந் நிலைக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது. (15)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று சபையில் விவாதம்

அரசுக்கெதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வந்துள்ள இரு நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் இன்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

பிரதமரால் அரசவங்கிகளின் வங்குறோத்து நிலை பற்றி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, எயர் லங்காவுக்கு எயர் பஸ் வாங்கிய விடயம் பற்றியதான இரு பிரேரணைகளே விவாதத்துக்கு இன்று எடுக்கப்படவுள்ளன.

இரு பிரேரணைகளும் ஒரே நாளில் விவாதிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

## 'ட்ரக்' தலை கீழாகக் கவிழ்ந்ததில் 16 கைதிகள், ஒரு காவலர் பலி!

ரஷ்யாவின் தென்பகுதியில் மிகப்பலமாகவீசிய காற்றினால் ஒரு ட்ரக் தலைகீழாகப் புரண்டு கவிழ்ந்து தீப்பற்றிக் கொண்டதனால் அதிலிருந்து 16 சிறைக் கைதிகளும் ஒரு காவலரும் உயிருடன் எரிந்து பலியானார்கள்.

சனிக்கிழமை இரவு இவ்விபத்து நடந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## இடர் கொடுப்பனவு: திறைசேரி வங்கித்தலைமை இடையே இழுபறி

வட கிழக்கு மகாணங்களில் இலங்கை வங்கியில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய இடர் கொடுப்பனவு (RISK ALLO WANCE) சம்பந்தமாக திறைசேரிக்கும், இலங்கை வங்கித் தலைமைப பீடத்துக்கும் இடையே இழுபறி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதனால் இக் கொடுப்பனவு கடந்த 15 மாதங்களாகத் தாமதப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது

இது விடயம் தொடர்பாக யாழ் வங்கி ஊழியர்கள் சங்கம் நிதியமைச்சின் செயலாளரின் பெண் உதவியாளருடன் பேச்சு நடத்தியதாகவும், இச்சிறிய விடயத்தை ஏன் பெரிதுபடுத்துகிறார்கள் என அலட்சியப் போக்கில் அவர் பதிலளித்ததாகவும் கூறப்பட்டது. (16)

## விசேட செயற்திட்டத்தின்கீழ் 30 பாடசாலைகள் தெரிவு

யாழ். மாவட்டக் கல்வி முகாமைத்துவ நிலையம் மேற்கொளளும் கல்வி அபிவிருத்தி விசேட செயற்திட்டத்தின கீழ் ஒவ்வொரு கோட்டக் கல்வி அலுவலகங்களிலிருந்தும் ஐந்து பாடசாலைகள் என்ற ரீதியில் முப்பது பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் வினைத்திறனை அதிகரித்தல், சமூகஉணர்வை விருத்தி செய்தல், இணைப்பாடவிருத்தி, ஆசிரிய மாணவர் அபிவிருத்தி போன்ற விடயங்கள் இவ்விசேட செயற்திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன. (15)

## விவரம் சேகரிப்பு

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அபிவிருத்திக்கான நிதி பற்றிய விவரம் திரட்டப்பட்டு வருகின்றது.

இக்கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு எந்தெந்தப் பகுதிகளிலிருந்து நிதி கிடைக்கின்றது என்ற விவரங்களைத் திரட்டுமாறு பிரதேசச் செயலகங்கள் பணிக்கப்பட்டுள்ளன. (14)

# 1980 பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரச

## ஊழியர்க்கு பல நிவாரணங்களை வழங்க அமைச்சரவை முடிவு!

1980 ஆம் ஆண்டு நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியதால் வேலையிழந்த அரச ஊழியர்களுக்கு அவர்களது புதிய நியமனம், பதவி உயர்வு தொடர்பாகப் பல நிவாரணங்களை வழங்க அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

ஏற்கனவே பதவியுயர்வுப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பனவற்றுக்குத் தோற்றி நியமனத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுப் பின்னர் வேலை நிறுத்தத்தில் பங்குபற்றியமைக்காக அந்த நியமனங்களைப், பதவியுயர்வுகளைப் பெற முடியாது போனவர்களுக்குப் புதிய முடிவின் படி முன்னைய திகதியிலிருந்தே அந்த நியமனங்களும் பதவியுயர்வுகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் கல்வித் தகைமைகளின் அடிப்படையில் அவர்களுக்கு இயல்பாகவே அக்காலப் பகுதியில் கிடைத்திருக்க வேண்டிய பதவியுயர்வுகளும் குறித்த திகதியிலிருந்து வழங்கப்படவுள்ளன

அதேவேளை அக்காலப் பகுதியில் நடந்த தேர்ச்சிப் பரீட்சைகளுக்கு வேலைநிறுத்தம் காரணமாகத் தோற்ற முடியாது போனவர்களுக்குப் புதிதாக அதற்குரிய சந்தர்ப்பம் மீண்டும் வழங்கப்படவுள்ளது. இத்தேர்வில் சித்திபெற்றால் அவர்களுக்குப் பழைய திகதியிலிருந்தே நியமனம் வழங்கப்படும்.

## பொதுஸ்தாபன பிரதிநிதிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சி

யாழ் மாவட்டத்திலுள்ள பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுக்குத் தலைமைத்துவப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

வடக்குக் கிழக்குமாகாண அரசு இத்தலைமைத்துவப் பயிற்சியை அளிப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலகப்பகுதிகளிலும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. 14

## கல்வி டிப்ளோமா கற்கைநெறி இடமாற்றம் இடைநிறுத்தம்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பட்டமேல் கல்வி டிப்ளோமா கற்கைநெறியினை தொடர்ந்து மேற்கொள்ள உயர்கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது

இந்நெறியினை கொழும்புக்கு மாற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சி மாணவர் தூதுக்குழுவொன்று உயர் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டதையடுத்து கைவிடப்பட்டது.

யாழ். பிராந்திய நிலையத்தில் இந்நெறியை கற்கும் மாணவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஒன்று கூடும்படி கேட்கப்பட்டுள்ளனர். (37)

## சம்பளம் எதுவுமில்லை

தீவுப்பகுதியிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இன்று வரையில் அரசினால் எதுவித சம்பளமும் வழங்கப்படவில்லை என அங்கிருந்துவந்த அனலைதீவு ஊழியர்கள் தெரிவித்தனர். (07)

## தேசிய முன்னணி நிலை; கலைஞர் சிங்குடன் பேசுவார்

''வி. பி. சிங்குடன் கலந்தாலோசித்த பின் தேசிய முன்னணி நிலை பற்றித் தீர்மானிக்கப்படும்'' என்று தி.மு.க தலைவர் கலைஞர் மு கருணாநிதி கோயம்புத்தூரில் செய்தியாளர் மத்தியில் கூறினார்.

இம்முன்னணியில் அங்கம் வகிக்கும் ஓர் கட்சியான தெலுங்கு தேசம் கட்சியில் பிளவு ஏற்பட்டது துரதிர்ஷ்டவசமானது என்றும் அவர் கூறினார்.

## காருக்குள் கம்யூட்டர் மூளை; சாரதிக்கு அது வழிகாட்டும்!

சாதிக்கு வழிகாட்டும் நவீன கார் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது. இரண்டாயிரமாம் ஆண்டில் உருவாக்கப்படும் கார் பார்க்கவும், சிந்திக்கவும் கூடியதாக இருக்கும் ஐரோப்பிய, ஜப்பானிய அமெரிக்க முன்னணிக் கார் நிறுவனங்களின் சுமார் 50 நிபுணர்கள் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இக்காரில் பொருத்தப்பட்டிருக்கும் கெமரா கண்கள் வீதிப் போக்குவரத்து அடையாளங்களைப் பார்த்தறியும். அருகில் வரும் கார்களை அவதானிக்கும். எதிரே உள்ள வாகன நெரிசல் குறித்து எச்சரிக்கும்.

இந்த நவீன காரின் கம்யூட்டர் மூளை வேகத்தைக் குறைக்கும். பாதை இடைஞ்சலைத் தடுக்க வேகத்தைக் கூட்டும் அல்லது காரின் தடயத்தை மாற்றும்.

## சீனித் தொழிற்சாலை, வடிசாலை கிளிநொச்சியில் விரைவில் இயங்கும்

கிளிநொச்சியில் சீனி உற்பத்தித் தொழிற்சாலையும். வடிசாலையும் விரைவில் நிறுவப்பட உள்ளன.

கிளிநொச்சி தெங்கு,பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது

இச்சீனித் தொழிற்சாலையில் சீனி உற்பத்திக்கெனத் தினமும் 4000 போத்தல் பதநீர் பயன்படுத்தப்படுமென்றும், 250 கிலோ பனஞ்சீனி தினமும் உற்பத்தி செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

சீனி உற்பத்தியில் மிஞ்சும் 'மெஸிஸஸ்' என்னும் கழிவுப் பாணி வடிசாலைக்குப் பயன்படுத்தப்படும். (14

## நடந்து முடிந்தது தேர்தலே அல்ல என்கிறார் நாஞ்சிலார்

கும்பகோணம் மகாமகத்தின் போது ஜெயலலிதாவின் 100 அடி கட் அவுட் வைக்கப்பட்டிருந்தது பக்தர்கள் அவரது கட் அவுட்டைப் பார்க்கவே வந்தார்கள்? 50 இலட்சம் பேர் குளிக்க வந்ததாகச் சொல்கிறார்கள். அவர்கள் அனைவரும் பாவிகள் என்றால் முதல் பாவி ஜெயலலிதா தான். அடுத்த பாவி அவரது தோழி சசிகலா

இவ்வாறு நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் நாஞ்சில் மனோகரன் கூறினார்

''நடந்து முடிந்த தேர்தல் ஒரு தேர்தலே அல்ல. தேர்தல் என்றால் இலட்சியம் கொள்கை பற்றிப்பேசி விவாதிக்கவேண்டும்.ஆனால் அங்கு கவர்ச்சியைக் காட்டி மயக்கி அக்கவர்ச்சிக்காக மக்கள் மயங்கியே வாக்கு போட்டார்கள். கோட்டை வெங்கட்ராமன் காலம்வரைதான் அ.தி.மு.க. கட்சி இருக்கும். ஜூலை மாதத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிகிறது அப்புறம் ஆட்டம்தான். ஒருவருடத்திற்குள் ஜெயலலிதாவின் பதவியும் பறிபோகும்'' என்றும் அவர் சொன்னார்.

## ஏப்ரல் முற்பகுதியிலிருந்து மின்வெட்டு அமுலாகும்

கடும் வறட்சி காரணமாக நீர் நிலைகளில் நீரின் மட்டம் மிகவும் வேகமாகக் குறைந்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது

தற்போதைய நிலையில் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் அளவைக்கொண்டு இன்னும் 16 நாள்களுக்கு மட்டுமே நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

இதனால் நாட்டில் மின்வெட்டை அடுத்த மாதத்திலிருந்து அமுல்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சிட்னி தமிழ் மகாநாட்டுக்கு இலங்கையிலிருந்து பேராளர்கள்

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மகாநாட்டில் பங்குபற்றுவதற்குப் பேராளர்களை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையில் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை ஈடுபட்டுள்ளது.

இம் மகாநாடு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

சிறப்புப் பிரதிநிதிகளாகப் பல பேராளர்கள் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். (14)

# செய்தி உலகம்

### காட்டிக் கொடுக்கும் காமிரா

சிங்கப்பூரில் மாடிகளில் உள்ள லிப்டுகளில் இரகசியமாக வீடியோக் காமிரா பொருத்தப்பட்டுள்ளது.

யாராவது துப்பினாலோ, சிறுநீர் கழித்தாலோ அது உடனே காட்டிக் கொடுத்துவிடும்,

உடனே 1000 டொலர் அபராதத்தைக் குறிப்பிட்ட குற்றமிழைத்தவர் செலுத்த வேண்டி ஏற்படும்,

### பெருஞ்சுவரும் தப்ப வழியில்லை

சீனப் பெருஞ்சுவர் தற்போது அழிந்து வருகிறது, காரணம் அருகாமையில் வசிக்கும் மக்கள் குடிசை அமைப்பதற்கு இக்கற்களைப் பெயர்த்தெடுத்துப் பயன்படுத்துவதுதான். இதற்கு அரசு தற்போது காவல் போட்டுள்ளது, எனினும் திருட்டு குறையவில்லை,

### ஊதுவது மட்டுமல்ல . . .

மூன்று சிகரெட் புகைப்பதில் உள்ள அளவு நிகோடின் ஒரு முறை புகையிலை போடுவதிலும், ஒரு முறை பொடி போடுவதிலும் உள்ளது எனக் கலிபோர்ணியா பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் பெனோவிட்ஜ் கூறியுள்ளார். (22)

### மனிதனின் வேகம் 38 மைல்களே!

மனிதனின் சராசரி ஒரு மணித்தியாலத்தில் 38 மைல்கள் ஓடுவான் எனக் கணக்கிடப்பட்டுள்ளது, ஆனால் குதிரை 48 மைல்களும், சிறுத்தை 70 மைல்களும், முயல் 40 மைல்களும் பன்றி 11 மைல்களும் 1 மணித்தியாலத்துக்கு சராசரியாக ஓடக் கூடியதாக உள்ளதாக ஆய்வுகள் மூலம் கணக்கிடப்பட்டுள்ளது. (15)

## எட்டு மாதமாக எட்டாத நிவாரணம்

தம்பலகாமத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள எழுநூறு குடும்பங்கள் எட்டு மாதங்களாக நிவாரணம் ஏதுமின்றி அவல நிலையிலுள்ளன,

மீளக்குடியமர்ந்தவர்களுக்கு ஒரு சிறு உதவியாக இருந்து வந்த கூப்பன் முத்திரைகளும் அண்மையில் முடிவடைந்து விட்டது,

## ஆசிரியர் எவருமில்லை

தமிழ் மொழியில் கல்வி கற்பிக்கும் அக்கரைப்பற்று இராமகிருஷ்ண கல்லூரியில் ஆண்டு ஆறு தொடக்கம் ஆண்டு பன்னிரண்டுவரையும் 1880மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள் ஆனால் அவர்களுக்குத் தமிழ்மொழி கற்பிக்க ஒரு ஆசிரியர்கூட இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## கைது

அகதிகளாக இடம்பெயர்ந்து பொலநறுவையில் குடியமர்த்தப்பட்ட முஸ்லிம்கள் அரச காணிகளில் சட்ட விரோதமாக விவசாயம் செய்த குற்றத்திற்காகப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்,

## வவுனியா இ.போ.ச. ஊழியருக்கு 1991 நவம்பர் வரை விசேடலீவு!

அசம்பாவித சூழ்நிலை காரணமாக கடமைக்குச் சமுகமளிக்க முடியாதிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போ ஊழியர்களுக்கு 17.11.91 ஆம் திகதி வரை விசேட விடுமுறை வழங்கப்படும்.

இக்காலப் பகுதி வரையில் சம்பளமற்ற விடுமுறை கணிக்கப்பட்டு அனைவருக்கும் உரிய கொடுப்பனவுகளும் வழங்கப்படும், இதற்கான உத்தரவை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபாலமெண்டிஸ் விடுத்துள்ளார்.

மேற்படி விசேட விடுமுறைகளையும், அக்காலத்திற்குரிய கொடுப்பனவையும் வழங்க வடபிராந்திய போக்குவரத்துச்சபை அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்து வந்ததையடுத்து இவ்விடயம் கடந்த வாரம் வவுனியாவுக்கு வருகை தந்திருந்த அமைச்சரின் கவனத்திற்கு ஊழியர்களால் கொண்டு வரப்பட்டிருந்தது.

## சி. க. கூ. கடன் வழங்கும்

யாழ். மாவட்ட சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்க சமாசம் சுயமுயற்சிக் கடனாக 5000, 10,000 ரூபாக் கடன்களை வழங்கி வருகின்றது.

இக்கடனுதவி கிராமிய ரீதியில் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது,

சுய முயற்சி வேலை வாய்ப்புக்கடன்களைத் தனியாகவும் கூட்டாகவும்பெற்றுக்கொள்ளலாம். (14)

# இலங்கை வர்த்தகரிடம் ஜப்பானில் கொள்ளை

ஜப்பானில் வாழும் இலங்கை வர்த்தகர் ஒருவரிடமிருந்து 25 மில்லியன் ரூபா பெறுமதியான ரொக்கப்பணம் உட்பட உடைமைகள் ஆயுதபாணிகளான சிலரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அவர் கடித மூலம் முறையிட்டுள்ளார்.

நான்கு ஜப்பானியர்களும், மூன்று எகிப்தியர்களும் இக்கொள்ளையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

13 வெற்றுக் காசோலைகளில் இவ் வர்த்தகர் கையொப்பம் பலவந்தமாகப் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மேர்கன்டைல் கிறடிற் லிமிட்டெட்

# வைப்பை மீளப்பெற விரும்பின் வட்டி விகிதம் 2 சதவீதம் வெட்டு

மேர்கன்டைல் கிறடிற் லிமிட்டெட் நிறுவனத்தில் இருந்து தமது பணத்தை மீளப்பெற விரும்புவோர் ஒப்பந்தப்படி தெரிவிக்கப்பட்ட வட்டி விகிதத்திலும் 2 சத வீதம் குறைவான வட்டியுடன் பணத்தை மீளப் பெறலாம் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பணவைப்பாளர்கள் தமது ஒப்பந்த காலம் பூர்த்தியாவதற்கு முன்னரே வைப்புப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதை தடுப்பதற்காக மத்தியவங்கி இந்த நிபந்தனையை அறிவித்துள்ளது.

எனினும் தமது வைப்பை புதுப்பிக்கும் வைப்பாளர்களுக்கு முன்னர் வழங்கிய வட்டி விகிதமே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திபெத்தியரின் சீன எதிர்ப்பு இந்தியா கண்டனம்

இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் அடைந்திருக்கும் திபெத்தியர் சீனாவுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள் என இந்திய அரசு எச்சரித்துள்ளது.

சீன எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடக்கூடாதென்ற அடிப்படையிலேயே தஞ்சம் அளிக்கப்பட்டதாகவும் அதை மீறி திபெத்தியா செயல்படுவதாக வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள சீன தூதரகத்தை திபெத்திய அகதிகள் தாக்கியதையடுத்தே இந்திய அரசு மேற்படி எச்சரிக்கையை விடுத்தது.

## சொந்த இடங்களுக்கு திரும்பாத

# தீவக ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு நிறுத்தப்பணிப்பு

காரைநகர், அனலைதீவு, ஊர்காவற்றுறை, எழுவைதீவு, நயினாதீவு, ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் அவர்கள் அப்பிரதேசங்களுக்கு திரும்பிச்சென்று தங்கள் பாடசாலைகளில் கடமையை ஏற்கும் வரை அவர்களின் கொடுப்பனவுகளை நிறுத்துமாறு கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் யாழ் கல்விப் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தின் பிரதி யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளரினால் வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. 15

## வெளிநாடுகளுக்கு அனுப்பும்

# போலி முகவர்கள் மீது ஜனாதிபதி நடவடிக்கை

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் போலி முகவர்கள் மீது ஜனாதிபதி பிரேமதாஸ கடும்நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களின் விபரங்கள் ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

ஏஜென்ஸிகளுக்கு பணம் செலுத்தி பயணம் தாமதமாவதால் தமது பணத்தை தருமாறு கேட்டால் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸாரிடம் ஏஜென்ஸிகளால் புகாரிடப்பட்டு, கைதுசெய்யப்படுகின்றனர் எனவும் அச்செய்திகள் தெரிவித்தன.

## காலமானார்
### வீரகத்திப்பிள்ளை சின்னப்பு

வீரகத்திப்பிள்ளை சின்னப்பு காலமானார். இவர் காலம்சென்ற இராக்கினியின் அன்புக் கணவரும். சி. யேசுதாசனின் (சிறைச்சாலை திணைக்களம் யாழ்ப்பாணம்.) தகப்பனாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் இன்று 17-3-92-ல் ஈச்சமோட்டையில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து பி. ப. 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக செஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
சி. யேசுதாசன்

03034

# இலங்கையில் தோல்விகண்ட இந்திய இராணுவ நடவடிக்கை

'ஸ்ரீலங்காவில் இந்திய அமைதி காக்கும் படை' என்ற தரப்பில் லெப்டினன் ஜெனரல் திபேந்தர் சிங்கும், 'யாழ்ப்பாணப் பணி ஒதுக்கம்' என்ற தலைப்பில் லெப்டினன் ஜெனரல் சர்தேஷ் பாண்டேயும் எழுதிய இரண்டு நூல்கள் பற்றி சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் விமர்சிக்கப்பட்டுள்ளன.

இந்திய அமைதிப் படை நடவடிக்கைகளின் போது தீர்மானம் எடுக்கும் வழி முறைகளில் இருந்த தவறுகளை திபேந்தர் சிங் சுட்டுக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்புபேச்சுவார்த்தை மூலமான தீர்வை இராணுவம் முன்வைத்து வாதிட்டபோது உளவுத்துறை மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் அரசியல் அதிகார வர்க்கம் தமது கட்டுப்பாட்டுச் சிறகுகளுக்குள்ளிருந்து தப்பிக் கொண்டதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்கு அவமானத்தை ஏற்படுத்தியதாகக் கற்பனையைக் கருத்திற் கொண்டு ராணுவத்தினரின் சிபாரிசை நிராகரித்தது மட்டுமன்றி தீவிரவாதிகளுக்கும் பாடம் புகட்ட வேண்டும் என்றும் கருதினர் ஆனால் யார் யாருக்குப் பாடம் புகட்டினர் என்பதை வரலாறுதான் மதிப்பிடவேண்டும்.

அதிகளவு வசதிகளைப் பெற்றிருந்த வெளிநாட்டுச் சேவை அதிகாரிகளும், அவர்களது சகபாடிகளான 'றோ' அமைப்பும் வசதி குறைந்த எளிமையாக ஆடையணிந்த பின்னணிகளிலிருந்து சரியான ஆங்கிலம் பேசத் தெரியாத விடுதலைப்புலிகளை சிறுவர்களுக்குச் சற்று மேலானவர்கள் என்றே தவறாகக் கருதினர்.

தாம் சந்தர்ப்பவசமாக மாட்டிக் கொண்ட யுத்தத்தைப் பற்றி இந்திய இராணுவத்தினரால் விளங்கிக் கொள்ள முடியவில்லை அவர்களை அனுப்பிய அரசியல் வாதிகளினது நிலையும் அதுவாகவே இருந்தது.

உண்மையாக விடுதலைப் புலிகளை அடக்குவது தான் நோக்கமாக இருந்திருந்தால் ஆரம்பத்திலேயே இராணுவத்தினருக்கு அவ்வாறு கூறப்பட்டிருக்க வேண்டும் அப்போது அவர்கள் தமது நடவடிக்கைகளை தாம் தெரிவு செய்து பொருத்தமான நேரத்தில் ஆரம்பித்திருக்கலாம்.

இப்படி நடக்காத காரணத்தால் எந்த இரண்டு குழுக்களை நாம் பிரிக்கச் சென்றோமோ அவர்கள் இருவரும் கைகோர்த்துக்கொண்டு எமது வாபஸைக் கோரின இது முழுமையான அரசியல் மற்றும் இராஜதந்திர பொருத்தமின்மையையும்திடமான நீண்டகால திட்டமின்மையையும் வெளிப்படுத்தியது.

விடுதலைப்புலிகள் பலம் அதிகரித்து இடம் மாறியிருந்த வன்னிப்பிராந்தியத்தில் ஏற்பட்ட தோல்வி மிக முக்கியமானது எனக் குறிப்பிட்டுள்ளது.

இந் நூல்களில் இந்திய நடவடிக்கைகள் தோல்வியுற்றமை சம்மந்தமாக முக்கிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய றோ அமைப்பு அதன் இரகசிய காப்பு என்ற போர்வைக்குள் மறைந்து கொள்ளாமல் உண்மை நிலைமையை ஆராய்ந்து பார்த்தார்களா என்று எதுவும் தெரியவில்லை என்றும் வெளியுறவு அமைச்சும் அவ்வாறு நடந்துகொண்டதா என்றும் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

### பொருள்கள்...

களில் விமானத்தாக்குதல்கள் நடைபெற்றபோதிலும் இப்பொருள்கள் இறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

06, 10

### அவுஸ்திரேலிய...

முடிவுத் திகதி எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி என அவுஸ்திரேலிய தூதரகம் அறிவித்துள்ளது.

### வடமராட்சி...

(21), மு. அமிர்தலிங்கம் (34) இவர்கள்படுகாயமடைந்தனர்) ச. அருணாசலம் (65), குமாரசாமி இராஜரத்தினம் (49) ஆகியோர் காயமுற்ற நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்

தொண்டமனாறில் இடம்பெற்ற குண்டுவீச்சில் வெளிக்கள நிலைய கட்டிடங்களும் நான்கு வீடுகளும் பலத்தசேதமடைந்தன

பிற்பகல்வரை தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

முன்னதாக வடமராட்சியில் படையினர் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்தனர்.

(07-08-09-10-11-15)

### பிரபாகரனை...

தியாவில் தடை செய்வது குறித்து அரசியல் விவகாரக் கமிட்டி பரிசீலிப்பதாகவும் அமைச்சர் சவான் கூறினார்.

சபையில் தொடர்ந்து உறுப்பினர்கள் பிரபாகரன் இன்னமும் கைது செய்யப்படாததைக் கண்டித்து கூச்சல் எழுப்பினராம்.

### பாதுகாப்புச்

பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு, ஏற்றுமதி வீழ்ச்சி என்பனவே இத்தகைய நிர்மாணப் பணிகளை கைவிடக் காரணம் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

எனினும் அத்தியாவசிய தேவைகளான வைத்தியசாலை, பாடசாலைகள் என்பவற்றை அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

இதேபோன்று அமைச்சரவை மற்றும் திணைக்கள செலவுகளைக் குறைக்கும்படியும் அரச வாகன பாவனைகளைக் குறைக்கும் படியும் தற்போது உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீக்கியர் நுழையவில்லை

சென்னை நகரினுள் சீக்கிய தீவிரவாதிகள் புகுந்துள்ளதாக வெளிவரும் செய்திகள் தவறானவை என சென்னை மாநகர பொலிஸ் கமிஷனர் இராஜகோபாலன் மீண்டும் மறுத்துள்ளார்.

# பிரபாகரன் நீதிமன்றம் வந்தால் நீதிபதி வருவாரா - பண்ருட்டி

அரசு என்ன நினைத்தாலும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் அதன் பங்கு என்னவாக இருந்தாலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழரினதும் கடமையாகும் என்று தமிழக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விசேட நீதிமன்றம் திரு. பிரபாகரனை சரணடையக் கோரும் பிரகடனத்தை வெளியிட்டபோது ''பிரபாகரன் நீதிமன்றத்தில் தோன்றலாம். ஆனால் அன்றைய தினம் நீதிபதி நீதிமன்றத்திற்கு வருவாரா'' என்று கேலியாகக் கேட்டுள்ளார்

தமிழ்நாட்டில் சுமார் இருபது அமைப்புகள் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருகின்றன. இவ்வமைப்புக்களில் கவிஞர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், படித்த வாலிபர்கள் முதலானோர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

## நீதிமன்றம் குற்றச்சாட்டு

# இராணுவ வாகனங்கள் தவறாக பயன்படுகின்றன

இராணுவத்தினர் உத்தியோகபூர்வ வாகனங்களைத் தவறாக பயன்படுத்துவதாக கொழும்பில் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்

இரு இராணுவ அதிகாரிகள் தமது 'உத்தியோகபூர்வ வாகனத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து தங்கங்களை கடத்திய தொடர்பாக கைதாகி நீதிமன்றில் அண்மையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ் வழக்கின்போதே நீதிமன்று இந்த குற்றச்சாட்டை வெளியிட்டுள்ளது.

இதில் இராணுவ சாரதி ஒருவர் சாட்சியமளிக்கையில் எந்த இராணுவ உத்தியோகத்தரும் வாகனம் எங்கு செல்கிறது என முகாமில் பதிவு செய்துவிட்டு வாகனத்தை எடுத்துச் செல்லலாம் என்றார்.

எனினும் சம்பவதினம் இந்த இராணுவ அதிகாரிகள் புத்தளம் செல்வதாக பதிவு செய்து வாகனத்தை கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு கொண்டு சென்றதாக நீதிமன்றில் கூறப்பட்டது.

இந்தப் பொய்யான பதிவை இத்தங்கக் கடத்தலுடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் மேஜர் பதமசிறி உடுகம்பொல ஏற்றுக்கொண்டு வாகனம் எடுத்துச் செல்ல அனுமதித்தாராம்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்விஙன்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 17-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது